**பதுளை - செங்கலடி வீதி முன்னேற்றச் செயற்திட்டத்திம் - 2017**

பதுளை - செங்கலடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் மற்றும் அபிவிருத்திக்கான சவுதி நிதியம் என்பவற்றிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 யூன் 26 மற்றும் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 1661 பி மற்றும் 10/639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னால் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும், தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பேராதனிய - பதுளை - செங்கலடி வீதியின் பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான வீதியின் 147 கிலோமீற்றர்களை புனரமைப்பதன் மூலம் பிராந்தியத்தில் போக்குவரத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் ஏற்ற வகையில் ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 140 மில்லினாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டமென இணக்கப்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. மிகுதி ஐ.அ.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியப்புச் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 மார்ச் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப்

பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீகரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும்வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின்மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின்

2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்தான செம்மையாக்கங்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள்மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1.20 மில்லியன் தொகையான மீதி 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 869,260 தொடர்புடைய மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின்போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | ஐ.அ. டொலர் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஔவ்ஐடி | 60 | 7,800 | 1,715 | 1,685 | 1,685 |
| எஸ்எவ்டி | 60 | 7,800 | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 20 | 2,600 | 400 | 400 | 1,168 |
| | **140** | **18,200** | **2,115** | **2,085** | **2,853** |

செயற்திட்டத்தின் காலப்பகுதிக்குள் இலக்குகளினை அடைந்துகொள்வதற்கு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த காலப்பகுதியினை மேவுகைசெய்யக்கூடியவாறு மாதாந்த, காலாண்டு, வருடாந்த அடிப்படையில் நிதி மற்றும் பௌதீக இலக்குகளினை சுட்டிக்காட்டக்கூடியவாறு விரிவான விபரமானதொரு செயல்நடவடிக்கைத் திட்டம், தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 10,500 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 03 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் 2017 சனவரியில் பேராதனை - பதுளை - செங்கலடி வீதியின் பதுளை தொடக்கம் பிபிலை வரையான 60 கிலோமீற்றர் வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தங்களின் கீழ் புனரமைப்பு வேலைகளினை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக, வீதியின் தொடர்புடைய பிரிவின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயல்முன்னேற்றம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1.8 சதவீதம் தொடக்கம் 7.8 சதவீதம் வரையான வீச்சொன்றில் மந்தமாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கா டெலிகொம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக்கொள்ளாது பயன்படுத்துகைகளின் நகர்த்தலுக்காக ரூபா 526 மில்லியன் தொகையொன்றை செயற்திட்டம் செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், மின்சாரம், தொலைபேசி இணைப்புக்கள் மற்றும் துருவங்களின் நகர்த்துகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 24 சதவீத மற்றும் 16 சதவீத மந்தமான செயல்முன்னேற்றத்தினை காட்டிய அதேவேளை நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு இணைப்புக்களின் நகர்த்துகை தொடர்பில் எவ்வித செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், அனைத்து ஒப்பந்தப் பொதிகளுக்குமான நகர்வு முற்பணமாக 2017 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 1,488.70 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய பெறுகை

வழிகாட்டலின் 5.4.4(1) ஆம் பந்திக்கு முரணாக, இடைக்கால தொகை வகைகள் மற்றும் எதிர்பாராதவைகள் உள்ளடங்கலாக முற்பணங்களினை கணிப்பிடுகையில் அச்சுப் பிழை காரணமாக, ரூபா 456.80 மில்லியன் மிகைச் செலுத்துகையொன்றை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பதுளை தொடக்கம் பிபிலை வரையான வீதிப் பிரிவில் காணப்படும் 6,487 மரங்களினை அகற்றுவதற்கு, ரூபா 8.10 மில்லியன் தொகையொன்று அவற்றிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக் கொள்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை. மரக்கூட்டுத்தாபனத்திற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அகற்றப்பட்ட 2,174 மரக்குற்றிகளினை கையளித்தமையுடன் தொடர்புடைய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காப்புறுதிக் கொள்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு கனியச் சிட்டையிடல் குறித்துரைக்கப்பட்ட ஒட்டுமொத்த தொகை செலுத்துகைகளாக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 21 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றுடன் தொடர்புடைய ஒப்பந்தக்காரரினால் ரூபா 4.80 மில்லியன் தொகையொன்று மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(ஈ) செயற்திட்ட தர உறுதிப்பாட்டு திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்திற்காக 2018 மே 31 வரையிலும் ஆலோசனையாளர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.4 காணிகளின் கொள்வனவு தொடர்பான விடயங்கள்

வீதி நிர்மாண வேலைகளுக்காக 2017 திசெம்பர் 31 வரையிலும் 5,411 காணித்துண்டுகளினை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டம் இலக்கிடப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40 காணித் துண்டுகளினை கொள்வனவு செய்வதற்கு ரூபா 13.30 மில்லியன் தொகையான இழப்பீடுகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 38 காணித் துண்டுகள் தொடர்பில் உரித்துக் கோரிக்கைகளினை தீர்ப்பனவு செய்வதில் தாமதங்கள் காரணமாக ரூபா 3.80 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது.